# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2033/47 - 2017 අගෝස්තු මස 23 වැනි බදාදා - 2017.08.23

*2033/47 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு பொல்கஹவலை, பொதுஹெர மற்றும் அலவ்வ நீர் கருத்திட்டத்தின் நீர் சுத்திகரிப்பு ஆலையொன்றினை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2017, ஓகத்து 17.
5/2/1/1270.

**அட்டவணை**

குருநாகல் மாவட்டத்தில், பொல்கஹவலை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 933, செரபீஸ்வத்த கிராம அலுவலர் பிரிவில், செரபீஸ்வத்த கிராமத்தில் அமைந்துள்ள செரபீஸ்வத்த, இதெல்லவத்த என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 2.616 ஹெக்டெயார் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

**துண்டு இலக்கம் : 1; விஸ்தீரணம் : 2.5721 ஹெக்டயார்**

| | | |
|---|---|---|
| வடக்கு | : | புகையிரத வீதி ; |
| கிழக்கு | : | என். எம். தென்னகோன் அவர்கள் உரிமைகோருகின்ற காணி ; |
| தெற்கு | : | துண்டிலக்கம் 02 ; |
| மேற்கு | : | முதலீட்டு சபைக்குரிய காணி. |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**துண்டு இலக்கம் : 2 ; விஸ்தீரணம் : 0.0448 ஹெக்டயார்**

| | | |
|---|---|---|
| *வடக்கு* | : | *துண்டிலக்கம் 01 ;* |
| *கிழக்கு* | : | *என். எம். தென்னகோன் அவர்கள் உரிமைகோருகின்ற மதிப்பீட்டு வரி இல. 132 உடைய காணி :* |
| *தெற்கு* | : | *உத்தேச வீதி ;* |
| *மேற்கு* | : | *துண்டிலக்கம் 02.* |

*காணிக்கு உரிமைகோருபவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் :*

1. *தலைவர், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு,*
   *கிரகரி மாவத்தை,*
   *கொழும்பு 07.*

2. *பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு,*
   *வொக்சோல் ஒழுங்கை,*
   *கொழும்பு 02.*

*9- 131*